2023

முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# பதினெண்கீழ்க்கணக்கு ஐந்திணை நூல்களில் மனிதன் உறவுநிலையில் உயிரினம்

அ.மகேஸ்வரி

தமிழ்த்துறை பேராசிரியர்

மங்கையர்க்கரசி கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பரவை, மதுரை

## முன்னுரை

மனிதன் தனித்துப்பிறந்தாலும் பல்வேறு உறவுகளாலும் தொடர்புகளாலும் அவன் வாழ்வு வளம் பெறுகிறது. உறவுப் பிணைப்பால் தான் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மனிதர்களுக்கு இடையிலுள்ள உறவுகள் போல் மனிதனுக்கும் உயிரினத்திற்கும் இடையிலுள்ள உறவின் முக்கியத்துவம் குறித்தும் ஆராயவேண்டியுள்ளது.

SAMPLE

## உறவு

“மனிதன் தனித்து வாழ்வதில்லை, மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு பிணைந்து வாழ்கிறான். பிறருடன் அவனுக்கு ஏற்படுகிற பிணைப்புகள் ஒரே வகையினதாகவோ ஒரே வாயிலாகவோ அமைவதில்லை. பல்வேறு வகையினங்களாகப் பல்வேறு நிலைகளில் பல்வேறு வழிகளில் அப்பிணைப்புகள் அமைகின்றன”[1] என்று **உறவுமுறை** பற்றி **வாழ்வியல் களஞ்சியம்** கூறுகின்றது.

“உறவுகள் அறிவு பூர்வமாகப் பின்னிப்படுவதில்லை! உணர்வு எனும் வலையால் அவை விஸ்தரிக்கப்படுகின்றன உணர்வுகளின் ஆழம்தான் உறவில் வலிமை”[2] என்பது **எம்.எஸ்.உதயமூர்த்தியின்** கருத்தாகும்.

“ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் உறவு கொண்ட இப்பிரபஞ்சத்தின் தன்மையை நாம் புரிந்து கொள்ளும் போது நமக்கும் பிற மனிதர்களுக்கும் (உயிரினங்களுக்கும்) நமக்கும் சூழ்நிலைக்குமுள்ள உறவுகளை மதிக்கவும் போற்றவும் கற்றுக்கொள்கிறோம். பரஸ்பரதொடர்பில் உதவியில் வாழ்வதற்கதாகத்தான் இந்தச் சமுதாயம் படைப்பட்டிருக்கிறது”[3] என்பதை உறவின் பிணைப்பு மூலம் உணரமுடிகிறது.

மனிதன் மனிதர்களிடம் மட்டுமின்றி விலங்குகள், பறவைகள் என உயிரினங்களிடமும் அன்பு செலுத்தும் போது உறவானது பாசப்பிணைப்பாகிறது. மனிதனும் உயிரினமும் கொள்ளும் உறவு பெரும்பாலும் நல்லுறவாகவும் சில நேரங்களில் துன்பம் மிகுந்ததாகவும் உள்ளது. மனிதன் உயிரினங்களுக்கு இடையே உள்ள உறவு குறித்தும் அவ்வுறவுகளின் போது வெளிப்படும் உணர்வுகள் குறித்தும் நாலைந்திணை நூல்கள் அமைகின்றன.

**நல்லுறவு**

உண்மையான அன்புப் பகிர்வு காரணமாக நல்லுறவு ஏற்படுகிறது. நல்லுறவு என்பது நல்ல உணர்வு காரணமாகத் தோன்றுவது ஆகும். தன்னலக் கலப்பின்றி கொள்ளப்படும் உறவு நல்லுறவு ஆகும்.

“எந்த எதிர்ப்பார்ப்பையும் பிரதிபலனையும் எதிர்ப்பார்க்காமல் அமைந்திருக்கும் இந்த உறவு வெறும் மனிதர்களை மட்டும் தழுவிய உறவாக இருக்காது. அது இயற்கை முழுவதையும் தழுவிய உறவாக இருக்கும். இப்படி வாழ்ந்து வருபவன் மலர்கள், கொடிகள், கனிகள், செடிகள், பறவைகள், பிராணிகள், சூரியன், சந்திரன், மலைகள், ஏரிகள், ஆறுகள், கடல்கள், தென்றல், நட்சத்திரங்கள், பிரபஞ்சம் ஆகியவை அனைத்துடனும் நல்ல உறவை ஏற்படுத்திக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருவான்”[4] உலக அமைதியும் நல்லிணக்கமும் இத்தகைய நல்ல உறவால் தான் உருவாகிறது.

“மனிதர்கள், பிராணிகள், பறவைகள், செடி – கொடிகள் போன்றவற்றுடன் எப்படிப்பட்ட உறவை அமைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை பொறுத்துதான் உலகச் சூழ்நிலை உருவாகிறது”[5] எனும் **ஜே.கிருஷ்ணமூர்த்தியின்** கருத்தும் இதனை உறுதி செய்கிறது. பதினெண்கீழ்க்கணக்கு ஐந்திணை நூல்களில் பெரும்பாலானவை மனிதன் - உயிரினம் இவற்றக்கு இடையேயான நல்லுறவைப் பற்றிக் கூறுகின்றன.

**அன்பு**

மனிதனை மற்ற உயிரினங்களிலிருந்து பிரித்து உயர்த்திக் காட்டுவது அன்பு. எனவே திருவள்ளுவர்,

**“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு”**[5]



SAMPLE

பெண் புறாவானது, ஆண் புறாவின் மீது ஊடல் கொள்வதை அறிந்த தலைவி, தலைவன் மீது ஊடல் கொள்வது பயன் அற்றதாகும். ஏனெனில்,

தலைவர் முன்னர் அன்பு கொண்டிருந்தாலும், பின்னர் நம்மைப் பிரிந்து வாழும் இயல்புடையவராக இருப்பர். ஆதலால், தலைவர் மீது ஊடல் கொண்டு, அன்பு மிகுந்த வாழ்வினை இழந்துவிடக்கூடாது என்று தலைவி புறாவிற்கு உரைப்பதாக அமைகின்றது. இதில், தலைவியானவள் உயிரினமாகிய புறாவிற்கு அறிவுரை கூறுகின்றாள். இதில் மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் இடையேயான உறவானது நன்கு வெளிப்படுகிறது. இதனை,

**“புன் புறவே சேலலோடு ஊடல் பொருளன்றால்**

**அன்புறவே யுடையார் ஆயினும் - வன்புற்று**

**அது கான் அகன்ற வழிநோக்கிப் போன்போர்த்து**

**இதுகாண் என் வண்ணம் இனி”. (தி.மா.நூற்., பா.எ.74)**

என்ற பாடல் அடிகளால் அறியலாம்.

**இல்வாழ்க்கை**

தலைவன் தலைவியர் திருமணம் செய்து கொண்டபின் கூடிவாழும் வாழ்க்கை தொடர்பான நிகழ்வுகள் இல்வாழ்க்கை என்று அழைக்கப்படும். இல்வாழ்க்கைத் தொல்காப்பியர்

**“மறைவெளிப் படுதலும் தமரிந் பெறுதலும்**

**இவைமுத லாகிய இயல்நெறி திரியாது**

**மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்**

**பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படும்” (தொல்.பொருள்.களவு., நூற். 79)**

என்று குறிப்பிடுகின்றார்.

மருதநிலத்தில் அமைந்துள்ள தலைவியின் இருப்பிடமானது நெற்கூடுகளின் உச்சியில் சேவல் கூவித் தூக்கத்தைக் கலைக்கின்றது. வண்டினங்கள் இசை பாடுகனிறன. தலைவி மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கின்றாள்.

அத்திருமணம் முடிந்தவுடன் தாய், மகளின் நிலையை அறிய தலைவியின் வீட்டிற்கு வருகின்றாள். அங்கு சேவலானது கூவி இனிய காலைப் பொழுதினை மலரச் செய்கின்றது. வண்டினங்கள் பண்ணிசைப் பாடுகின்றன. இவை அனைத்தும்,

SAMPLE

தலைவன் வீட்டில் மனிதர்களும் உயிரினங்களும் ஒற்றுமையுடன் உறவாடும் நிகழ்ச்சியும் மகிழ்ச்சியையும் குறிக்கின்றது. இதனை,

**“நல்வயல் ஊரன் நறுஞ்சாந்து அணிஅகலம்**

**புல்லிப் புடைபெயரா மாத்திரைக்கண் - புல்லியார்**

**கூட்டு முதலுறையும் கோழி துயல் எழுப்பப்**

**பாட்டு முரலு மாம் பண்”. (தி.மா.நூற்., பா.எ. 143)**

என்ற பாடல் அடிகளால் உணரலாம்.

**விளையாட்டு**

விளையாட்டு என்பது பொழுதுபோக்கு நிலைக்காக ஆரம்பிக்கப்பட்டு மனமகிழ்ச்சியூட்டும் நிலைக்கு மாறிய செயலே விளையாட்டு எனலாம். அதாவது உடல்திறன், செயல்திறன், உள்ளதிறன் இவற்றின் மனமகிழும்படியான செயல்களே விளையாட்டு எனலாம்.

மணற்பரப்பில் உலர வைத்துள்ள மீன்களை, காவல் செய்யும் தலைவி, புன்னை மரங்கள் நிறைந்த சோலையில் உள்ள அன்றில் பறவைகளுடன் விளையாடுகின்றாள். இதனை,

**“அடற்கானல் புன்னைதாழ்ந்து ஆற்ற – மடற்கானல்**

**அன்றில் அகவும் அணிநெடும் பெண்ணத்து எம்**

**மூன்றில் இளமணல்மேல் மொய்த்து”. (தி.மா.நூற்., பா.எ.56)**

என்ற பாடல் அடிகளால் மனிதர்களும் உயிரினங்களும் ஒன்றாக விளையாடும் நிகழ்ச்சி கூறப்படுகின்றது.

கடற்கரையில் பெண் நண்டுடன் ஆண் நண்டு கூடி இன்பமுற்று விளையாடுகின்ற நிகழ்வைக் கண்ட தலைவன், தலைவியோடு இவ்வாறு விளையாடுவதற்கு ஏற்ற வாய்ப்பானது என்று கிடைக்குமோ என்று தலைவன் வருந்திக் கூறுவதாக அமைகின்றது. இதனை,

**“தன் துணையோடு ஆடும் அலவனையும் தான் நோக்காக**

**இன் துணையோடு ஆட இயையுமோ”. (தி.மா.நூற்., பா.எ.40)**

SAMPLE

என்ற பாடல் அடிகளின் மூலம் உயிரினங்களின் செயல்களின் மூலம் தலைவன் வருத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. இவை மனிதர்களுக்கும் உயிரினங்களுக்கும் இடையே உள்ள உறவை வெளிப்படுத்துக்கின்றது.

**முடிவுகள்**

உலகினைப் பிணைப்பது உறவு. உலகம் உறவுகளால் இயங்கி வருகிறது. மனிதன், உயிரினம் இவற்றுக்கு இடையே நல்லுறவு நிலவுவது ஐந்திணை வழியாகச் சுட்டப்பட்டுள்ளது. அன்பு அனைத்திற்கும் அப்பாற்பட்டது. உயிரினம் மீது மனிதன் கொண்டுள்ள அன்பானது ஐந்திணை நூல்களின் வழியாக இல்வாழ்க்கை, விளையாட்டு என்பதன் வழியாக பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. வாழ்வியல் களஞ்சியம், ப. 339
2. எம்.எஸ்.உதயமூர்த்தி, மனித உறவுகள், முன்னுரை ப.3
3. மேலது, ப. 4-5.
4. ஜே. கிருஷ்ணமூர்த்தி, மனித உறவுகள் ஒரு பரிசீலனை, ப. 25.
5. புலியூர்க் கேசிகன், திருக்குறள், ப. 81.

SAMPLE